**ஹொரவ்பொதான பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

ஹொரவ்பொதான பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்து / உரிமை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான முக்கியத்துவம் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹொரவ்பொதான பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவுனங்களிற்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள்,

நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள் மற்றும் பொருத்தமான சட்ட விதிகளிற்கிணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 (ஈ) அவதானிப்பு தவிர, முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட புதிய பொதுச் சந்தை கருத்திட்ட கட்டிடங்களின் நிர்மாண பெறுமதி ரூபா 26,216,617 ஆன போதும், கட்டிடக் கணக்கில் அது ரூபா 32,462,342 எனவும் பிரதான மூலதன மானியக் கணக்கில் அது ரூபா 48,442,160 ஆகவும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட பாதைகளின் பெறுமதி ரூபா 917,332 ஆன போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது 20,860,955 ஆன கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2020 சனவரி 01 திகதியின் பின்னர் வாகன கொள்வனவு செய்யப்பட்டிருக்காத போதும், மீளாய்வாண்டில் வாகன மூலதன மானியமாக ரூபா 16,515,542 மூலதன | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2022 ஆண்டு நிதிக்கூற்று கணக்காய்வின் போது சுட்டிக் காட்டிய ரூபா 20,388,313 ஆன நிலையான சொத்து மற்றும் மூலதன மானியம் மீளாய்வாண்டிலும் கணக்கீடு செய்யாததால் நிலையான சொத்து மற்றும் மூலதன மானியம் அப் பெறுமதியால் குறைந்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் 2020 ஆண்டில் ரூபா 142,700,000 ஆன 04 பாலங்கள் நிர்மாணித்தல் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | பதிவு செய்யப்பட்ட டெக்டர் டேலரின் பெறுமதி ரூபா 400,000 ஆன போதும், சொத்துக்கள் மற்றும் பொறுக்கள் கூற்றில் அது ரூபா 40,000 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | வாகனங்களிற்காக ரூபா 165,542 பெட்டரி கொள்வனவு சொத்துக்கள் மற்றும் பொறுக்கள் கூற்றில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிலையான சொத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் சூரிய வலு சக்தி தொகுதியிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 368,191 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 281,583 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | விதைகளை பகிர்ந்தளிக்கும் கருத்திட்டமொன்றிற்காக மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்த ரூபா 495,500 தொகை வாகன வாடகை வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | வருமான விடயங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 வருமான உருப்படிகளில் மற்றும் ஒரு செலவின உருப்படியில் விரிவான வருமான கூற்றில் மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிகளிற்கு இடையே ரூபா 42,700 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்வதென. | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கைகள் அட்டவணைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் மிகையில் / பற்றக்குறையில் இனங்காணாத மூலதன செலவு மானியம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 57,220,145 ஆன போதும் உரிமை மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் அது ரூபா 112,528,653 ஆனதில் ரூபா 55,308,508 ஆன வித்தியாசம் ஆனது. | - மேற்படி - | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சீராக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை | இணங்காத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ---------- | ------------<br>ரூபா | ---------------------------- | -------------- | ------------- |
| (அ) | இயந்திரம் | 15,472,368 | அட்டவணை | ஏற்றுக் கொள்வதென. | உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டு பெறுமானத் தேய்வு | 25,674,477 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (இ) | 2022 ஆண்டிற்கு முன்னர் பெற வேண்டிய குத்தகை வாடகை | 4,115,439 | (i) அட்டவணைகள்<br>(ii) உறுதி செய்யும் கடிதக் கோவை<br>(iii) காலப் பகுப்பாய்வு | மேற்படி | மேற்படி |
| (ஈ) | பெற வேண்டிய அனுமதிப்பத்திரம் | 1,033,300 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (உ) | கடை வாடகை உடன்படிக்கையுள்ள | 158,500 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (ஊ) | டென்டர் பிணை வைப்பு | 58,500 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (எ) | நூலக வைப்பு | 52,715 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (ஏ) | நானாவித வைப்பு 01 | 2,328,000 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (ஐ) | நானாவித வைப்பு 02 | 22,000 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| (ஒ) | நானாவித வைப்பு 04 | 100,000 | மேற்படி | மேற்படி | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 17,772,413 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 4,574,537 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு 2023 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 2,895,950 ஆன முத்திரை கட்டணம் மற்றும் ரூபா 1,823,190 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமான உருவாக்க கருத்திட்டத்திற்கு ஈடுபடுத்தாது சாதாரண நிர்வாக செயற்பாடுகளிற்குரிய செலவுகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | வருமானத்தை உருவாக்கும் கருத்திட்டங்களிற்கு இந்த நிதியை பயன்படுத்த வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,912,000 | 1,813,337 | 1,990,529 | 1,187,787 | 1,988,400 | 1,786,680 | 1,832,939 | 1,364,979 |
| (ii) | வாடகை | 10,754,032 | 11,354,170 | 10,585,683 | 7,362,317 | 11,206,000 | 6,991,454 | 7,893,798 | 6,593,830 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 4,633,500 | 990,755 | 1,364,055 | 1,034,300 | 5,035,000 | 813,848 | 431,548 | 1,407,600 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,504,150 | 3,271,366 | 5,608,599 | 1,171,855 | 5,964,000 | 2,138,473 | 333,803 | 3,509,088 |
| | | 22,803,682 | 17,429,628 | 19,548,866 | 10,756,259 | 24,193,400 | 11,730,455 | 10,492,088 | 12,875,497 |

### 2.3.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | 1994 ஆண்டின் ஆதன மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்பட்டு வருவதுடன் புதிய நிர்மாணம், அகற்றுதலின் பிரகாரம் வீதவரி அறிவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 248,087 ஆன நிலுவை வீதவரி அறவிடப்பபட்டிருக்கவில்லை. | புதிய வீதவரி மதிப்பீடு இடம்பெற்று வருவதென. | புதிய வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலுவை வீதவரியை அறவிட வேண்டும். |
| (ii) | வீதவிரி பெயர்களை திருத்த நிகழ்சித் திட்டமொன்றை தயாரிகத்திருக்காததுடன் வீதவரி அறவிட வருமானத்தை விஞ்சி செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | புதிய வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும் | புதிய வீதவரி மதிப்பீட்டின் பின்னர் சரியான வீதவரி பெயர் திருத்தத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். |
| (iii) | ஆண்டு 01 இற்கும் 10 இற்கும் இடையிலான காலமாக நிலவிவரும் 128 நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய குப்பை வரி ரூபா 867,300 மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | மூடப்பட்டிருந்த நிறுவனங்களிற்கு பில்லிடப்பட்டதால் இந்த நிலுவை ஏற்பட்டுள்ளதென. | பெறவேண்டிய மீதிகளை தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | ஆண்டு 01 இற்கும் 02 இற்கும் இடையிலான காலமாக நிலவிவரும் 21 நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய வியாபார வரி ரூபா 68,400 மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | அறவிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | பொது சந்தையினுள் அமைந்துள்ள கடையறைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 356,800 ஆன வாடகையை 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | இதனுடன் தொடர்பான சில உரிமையாளர்கள் மரணித்துள்ளதென மற்றும் குறித்த உடன்படிக்கை இல்லாததால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதென. | பெறவேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ஆண்டு 01 இற்கும் 08 இற்கும் இடையிலான காலமாக நிலவிவரும் சபைக்கு சொந்தமான 39 கடையறைகளிற்கு அறவிட வேண்டிய ரூபா 1,157,430 ஆன நிலுவை வாடகையை அறவிட பிரதேச சபை சட்டத்தின் 159 (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடையறைகளிற்குரிய உடன்படிக்கைகள் உள்ளூராட்சி திணைக்களத்தில் காணாமல் போயுள்ளதால் அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதென. | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறிவட நடவடிக்கை எடுக்கக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஆண்டு 01 யையும் 08 யையும் விஞ்சிய காலமாக நிலவிவரும் சொத்துக்கள் குத்தகை வழங்கியதற்கா அறவிட வேண்டிய ரூபா 5,152,943 ஆன நிலுவை வாடகையை அறவிட மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிலுவைக்குரிய சில கடையறைகளின் உடன்படிக்கைகள் காணாமல் போயுள்ளதால் வழக்கு தாக்கல் செய்ய முடியாதுள்ளதுடன் எஞ்சிய கடையறைகளிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதென. | மேற்படி |
| (iv) | பிரதேச சபை இயந்திரங்களை வாடக்கு வழங்குவதற்காக 30 தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 1,051,944 தொகையை 2023 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுத்து வருவதென. | நிலுவை வாடகையை அறிவட நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திர கட்டணம்** | | |
| | பல ஆண்டுகளாக அறவிட வேண்டிய தரப்பிரனரை இனங்காணாத ரூபா 1,034,300 ஆன அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தவறுதாலான பில்லிடலினால் இந்த நிலுவை ஏற்பட்டுள்ளதென. | பெறவேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கக வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | 177 குழாய் கிணறுகளிற்காக அறிவிட வேண்டிய குழாய் கிணறு கட்டணம் ரூபா 373,900 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 697,693 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 68,259 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுப்பதென | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் முக்கிய 30 விடயங்களை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க இயலுமாகவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த விடயங்களிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுப்பதென. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைதிறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திலிருந்த பேல் செய்யும் இயந்திரம் 2023 ஆண்டில் தீபற்றியதால் அழிவடைந்திருந்த போதும் அது தொடர்பாக முறையான விசாரணை நடாத்தி அதனை நாளாதுவரையாக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரை அறிவூட்டியுள்ளதென. | முறையான விசாரணை ஒன்றை நடாத்தி பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து இழப்பை அறவிடவும், பேல் செய்யும் இயந்திரத்தை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத வேண்டும். |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு தினந்தோறும் உரிய கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீடொன்றை மேற்கொண்டு சரியான கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | சரியான கட்டணத்தை அறிவட நடவடிக்கை எடுக்கக வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | LDSP கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 10 கடையறைகளில் 03 கடையறைகள் விளைவற்று நிலவின. | இறைச்சி மற்றும் மீன் கடைகளை நடாத்திச் செல்ல வழங்க கவனம் செலுத்துவதென. | விளைவற்றதாக வைத்திருக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது சந்தைக்கு முன்பக்கமாக அமைந்துள்ள 07 கடையறைகளில் இலக்கம் 01 மற்றும் 02 ஆகிய கடையறைகளை திருத்தாததால் 2018 ஆண்டு முதல் விளைவற்ற நிலவின. | இலக்கம் 01 மற்றும் 02 ஆகிய கடையறைகளில் 02 குத்தகைக்கு வழங்க பொருத்தமான நிலையில் இல்லையென. | இக் கடையறைகளை குத்தகை வழங்க பொருத்தமான நிலைக்கு மாற்ற வேண்டும். |
| (இ) | கபுகொல்வேல போலிசிற்கு 2021 ஜுலை 01 முதல் வழங்கியிருந்த கடையறையை மீண்டும் சபைக்கு பெற்றுக் கொள்ள அல்லது உடன்படிக்கை கைச்சாத்திட்டு கட்டணம் அறிவிட நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திட வருமாறு குறித்த தரப்பினரிற்கு அறிவித்துள்ளதென. | உடன்படிக்கை கைச்சாத்திட்டு வாடகை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்ட பிரகாரம் ரூபா 662,860 ஆன நலன்புரி நிகழ்சித் திட்டங்களை செயற்படுத்தி இருக்காததுடன் பரல் பாதைகளை அபிவிருத்தி செய்தல், நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் பொது நிதியத்தின் கீழ் கைத்தொழில் கருத்திட்டங்களை மேற்கொள்வதாக குறிப்பிட்டுள்ள போதும் அதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதியை அல்லது குறித்த செயற்பாடுகள் எதுவென இனங்காணல் ஒன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இக் கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | திட்டமிட்ட நடவடிக்கைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் ரூபா 3,200,577 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் செயலற்று நிலவியதுடன் உக்கலடையும் கழிவுகளிலிருந்து இயற்கை பசளை உற்பத்தி செய்ய மற்றும் உக்கலடையாத கழிவுகளை தெரிவு செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக சபை அதிகார எல்லையில் தினந்தோறும் எடுத்து வரப்படும் கழிவுகள் மொடோகோனேவ வனத்திற்கு முறையற்ற விதத்தில் வெளியிடப்பட்டிருந்தன. | தற்போது இந் நிலைமையை சீராக்கியுள்ளதென. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை ஒழுங்கு முறையாக மேற்கொள்ள வேண்டும். |